**பிரதம மாவட்ட நீதிமன்றம், திருவள்ளூர்.**

இந்நீதிமன்ற உதவியாளர் திரு. மோகன் அவர்களால் பிரமாணம் செய்விக்கப்பட்டு இந்திய சாட்சிய சட்டம் 1871, பிரிவு 1-ன் கீழ் மனுதாரர்/ எதிர்மனுதாரர் தரப்பு 1வது சாட்சியாக விசாரிக்கப்பட்டு 2026-ம் ஆண்டு ஜனவரி திங்கள் 09ஆம் நாள் பதிவு செய்யப்பட்டது.

பெயர்.................................................... மாவட்டம்.........................................................

கிராமம்............................................................ தந்தை /கணவர் பெயர்...........................................

தாலுக்கா........................................................... தொழில்..................................................................

---

# LAOP No. 806/2024 batch of 8 cases

# 09.01.2026

**ம.த.சா.1 - திரு. சசிக்குமார் த/பெ. செல்வம்**

<u>சாட்சி சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு மனுதாரர் தரப்பில் முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறார்.</u>

**<u>முதல் விசாரணை</u>**

நான் அத்திவாக்கத்தில் வசித்து வருகிறேன். நான் இந்த மனுவின் மனுதாரர். நான் மற்ற மனுதாரருக்கும் சேர்த்து சாட்சியம் அளிக்கிறேன். என் தரப்பு சாட்சியத்தை நான் நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். என் நிரூபண வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகள் எனக்கு நன்றாக தெரியும். என் நிரூபண வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். அதனை படித்து பார்த்து தான் கையெழுத்து செய்தேன். என் தரப்பில் வேறு ஆவணங்கள் எதுவுமில்லை.

1. 04/11/2019 தேதியிட்ட கிரைய பத்திரத்தின் சான்றிட்ட நகல் (ஆவண எண் 4126/ 2019) **ம.த.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

2. 08/04/2019 தேதியிட்ட கிரைய பத்திரத்தின் சான்றிட்ட நகல் (ஆவண எண் 1327/ 2019) **ம.த.சா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

3. எனது ஆதார் அடையாள அட்டையின் நகல் (அசலுடன் ஒப்பிட்டு பார்க்கப்பட்டு சரியாக இருந்ததன் பேரில் அசல் சாட்சி வசம் ஒப்படைக்கப்படுகிறது) **ம.த.சா.ஆ.3** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

**மனுப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.**

<u>அரசு வழக்கறிஞர் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

மற்ற மனுதாரர்கள் 8 பேரும் எனக்கு சாட்சியம் அளிக்க அதிகாரம் கொடுத்துள்ளார்களா என்றால் இல்லை. ஆர்ஜிதம் செய்யப்பட்ட நிலங்கள் ரயில்வே மேம்பாலத்திற்காகவும், போக்குவரத்து நெரிசலை குறைப்பதற்காக ஆர்ஜிதம் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். பொது நோக்கத்திற்காக நிலம் ஆர்ஜிதம் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். கையப்படுத்தப்பட்டுள்ள நிலங்களுக்கு அருகாமையில் 1 சதுரடி ரூபாய் 3000த்திற்கு விற்பனையாகிறது என்பதற்கான ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். ஆர்ஜிதம் செய்யப்பட்ட நிலங்களுக்கு அருகாமையில் உள்ள லேஅவுட் அப்ரூவல் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். ஆர்ஜிதம் செய்யப்பட்ட நிலங்களுக்கு அருகில் வளர்ச்சி அடையந்த பகுதிகள் உள்ளன என்பதை காட்டுவதற்கு GPS புகைப்படம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் நீதிமன்றத்தில் குறியீடு செய்த ஆவணங்கள் விசாரணையின் போது தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். புதிய நில எடுப்பு சட்டத்தின்படி சரியாக இழப்பீடு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது என்றாலும் அதிகப்படியான இழப்பீடு எனக்கு கிடைக்கதக்கதல்ல என்றால் சரியல்ல.

Typed to my dictation and correction
by me in open court read over to the
witness and admitted by him as correct.

Sd/- J.Juliet Pushpa
Principal District and Sessions Judge,
Tiruvallur.